1981 ஏப்ரல் 21]

சதவீதம், வங்கிகள் மூலம் கடன் வாங்கி கால்நடைகள் வாங்கினால், $\frac{1}{2}$ சதவீதத்திலிருந்து 2 சதவீதம் வரையில் கால்நடைகளுக்கு ஏற்ப, பிரிமியத் தொகையில் தள்ளுபடி செய்யப்படும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் இயங்கிவரும் கால்நடை பண்ணைகளில் உள்ள கால்நடைகளுக்கு, இந்த இன்சூரன்ஸ் திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் கூறும்போதே அதைக் கூறிவிட்டேன்.

காங்கேயம் மாடுகளின் இனவிருத்தித் திட்டம்.

*வினா எண். 831—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

"காங்கேயம் மாடுகளின் உற்பத்தி மற்றும் இனவிருத்தியைப் பெருக்குவதற்கான ஏற்பாடுகள் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: அரசு ஆணை எண் 2457, வேளாண்மை, நாள் 30—12—1980-ல், பெரியார் மாவட்டத்தில் பழைய கோட்டையில் காங்கேயம் கால்நடை வளர்ப்புப்பண்ணை ஒன்று நிறுவ அரசு ஒப்புதலளித்துள்ளது.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஆரோக்கியமாக இருக்கும் மனிதர்களைப் பார்த்து காங்கேயம் காளைபோன்று கொழு கொழுவென்றிருக்கிறாய் என்று சொல்வார்கள். அப்படி பிரசித்திப்பெற்ற அந்த இன காங்கேய மாடுகளை அதிகமான அளவில் இனவிருத்தி செய்யும்வகையில், தமிழ்நாடு பூராவும் அந்த இனங்களை வளர்க்கும் ஒரு திட்டத்தை ஏற்படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்த முடியாது. பெரியார் மாவட்டத்தில் பழைய கோட்டையில் காங்கேயம் கால்நடை வளர்ப்புப் பண்ணை ஒன்றை நிறுவ இப்பொழுதுதான் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

பெரியார் மாவட்டத்தில் பழைய கோட்டை கால்நடை பண்ணையில், தமிழ்நாடு நில சீர்திருத்தச் சட்டத்தின் கீழ்

உபரி நிலங்களென்று அறிவிக்கப்பட்ட நிலப்பரப்பில், காங்கேயம் கால்நடை வளர்ப்புப் பண்ணை அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. பெரியார் மாவட்டம், பழைய கோட்டை கால்நடைப்பண்ணை நிலங்களில், தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் உபரி நிலங்களென்று அறிவிக்கப்பட்ட நிலங்களில் 705.63 ஏக்கர் பரப்பளவுள்ள ஒரு நிலப்பகுதியை காங்கேயம் கால்நடை வளர்ப்புப் பண்ணைத் திட்டம் அமைப்பதற்கு தகுதியான இடமென தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இப்பண்ணையை அமைக்க, மேற்படி தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டம் (உபரி நிலங்கள் விநியோகம் செய்யும் விதிகள்) விதி 13-ன்கீழ் உபரி நிலங்களை ஒதுக்கீடு செய்வதற்கும், அதற்கான செயற்குறிப்பை அரசு வருவாய்த்துறைக்கு அனுப்புமாறும் வருவாய்த் துறை ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். வருவாய்த் துறை ஆணையரிடமிருந்து இச்செயற்குறிப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி நிலங்கள் கால்நடை பராமரிப்புத் துறையினால் எடுத்துக் கொள்ளப்பட்டவுடன் இப்பண்ணையை நிறுவுவதற்கான செலவுகளும் ஏனையத் தேவையானவைகளையும் வழங்குவது பற்றி ஆராயப்படும். எனவே, தமிழ்நாடு முழுவதும் காங்கேயம் இன மாடுகளை விருத்தி செய்தால் நன்றாக இருக்கும் என்று உறுப்பினர் அவர்கள் கூறினார்கள், அப்படி தமிழகம் முழுவதும் செய்ய முடியாது என்று கூறிக் கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பெரியார் மாவட்டத்தில், காங்கேயம் பகுதியில், காங்கேயம் இன மாடுகளை வளர்க்கும் பண்ணை அமைப்பது பற்றி சொன்னார்கள். நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் மிச்சமாகும் நிலங்கள் இந்த திட்டத்திற்கு எடுக்கப்பட்டு வருவதாகவும் சொன்னார்கள். மிக நல்ல முயற்சி. இதிலே காங்கேயம் பகுதியிலேயே மேய்ச்சல் நிலங்கள் என்ற பெயரால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை தனிப்பட்டவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலங்களைக் கைப்பற்றி, அவைகளிலும் இந்த காங்கேய இன மாடுகளை உற்பத்தி செய்யும் பண்ணையை நிறுவ அரசு ஆவன செய்ய (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்பதற்கும் காங்கேய மாட்டிற்கும் சம்பந்தம் இல்லை. உட்காருங்கள்.

வினாக்காள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைத் குறிக்கும்.]